1982 மார்ச் 17

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேன்டீனைப் பொறுத்த வரையில் சிறை நிர்வாகம் தான் அதை நடத்திக் கொண்டு இருக்கிறது. சிறை நிர்வாகம் தான் அதை நடத்த முடியும். வருங்காலத்தில் மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல், சிறைக்குள்ளேயிருக்கிற கைதிகள் அடங்கிய குழு போட்டு, அதிலே முறைக்கேடுகள் ஏதும் நடக்காமல் இருக்க பாதுகாப்புகள் செய்து அவற்றை நடத்த அரசு ஆவண செய்யும்.

திரு, இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அந்தத் கேன்டீன்கள் சிறை நிர்வாகம் நடத்துகின்றது என்றும், வருங்காலத்தில் குழுக்கள் அமைக்கப் படும் என்றும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதைப் பார்வையிடுவதற்கும், அந்தக் கேன்டீனை பற்றிய கருத்துக் களைக் கூறுவதற்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வசதி செய்து கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே சிறை கண்காணிப்புக் குழுக்கள் இருக்கின்றன. இந்தக் குழுவில் சட்டமன்ற உறுப்பினர்கள் இடம் பெறுவதில் தவறு இல்லை. அதையும் அரசு ஆலோசிக்கும்.

திரு. இரா. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக சிறைச்சாலையில் கேன்டீன்கள் நடைபெறுவதாக நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்லியிருக் கிறார்கள். அங்கே நடத்துகின்ற அந்தக் கேன்டீன்களில் தேவையான சாமான்களை வாங்கிச் சாப்பிடுவதற்கு கைதிகள் பணம் வைத்துக் கொள்வதற்கு அரசு அனுமதி அளித்து இருக்கிறதா? சிறைச்சாலைகளில் உள்ள கைதிகள் பணம் வைத்துக் கொள்ளக்கூடாது என்று விதி இருக்கிறதே. அப்படி இருக்கின்றபோது எப்படி இதைச் செய்வதற்கு அரசு அனுமதித்து இருக்கிறது என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குறிப்பிட்ட அளவிற்கு பர்சனல் கேஷ் பிராபர்டி அவர்கள் வைத்துக் கொள்ள அனுமதி இருக்கிறது. அந்த அடிப்படையில்தான் நடைமுறையில் அது இயங்கி வருகிறது.

மதுரை வீட்டு வசதி வாரியத்தின் மூலம் உயர்ந்த வருமானம் உள்ளவர்களுக் கட்டப்பெற்ற வீடுகள்.

* வினா எண் 525— திரு. க. பாரமலை: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் மதுரையில் இதுவரை கட்டப்பட்டுள்ள உயர்ந்த வருமானம் உள்ளவர்களுக்கான வீடுகள் எத்தனை?

(ஆ) அதில் எத்தனை வீடுகள், தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர் வகுப்பை சேர்ந்தவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது?

(இ) மேற்படி வகுப்பைச் சார்ந்தவர்களுக்கு உரிய சதவீதப்படி வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளனவா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) 64

(ஆ) மூன்று

(இ) தாழ்த்தப்பட்ட வகுப்பினரிடமிருந்து வந்த விண்ணப்பதாரர்கள் மூவருக்கும் வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

திரு. ப. நெடுமாறன்: தலைவரவர்களே, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி வகுப்பினரைச் சேர்ந்த எத்தனைப் பேர்கள் இந்த வீடுகள் வேண்டுமென்று விண்ணப்பிதார்கள்? அவர்களில் எத்தனைப் பேர்களுக்கு வீடுகள் ஒதுக்கப்பட்டன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, முதலில் 3 பேர் கேட்டார்கள். அவர்களுக்கு கொடுக்கப்பட்டது. அதன் பிறகு ஒருவர் கேட்டார். அவருக்கும் கொடுக்கப்பட்டது. பின்னால் அவர் வேண்டாம் என்று சொல்லி விட்டார். வீடு கொடுத்த 3 பேர்களும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவரவர்களே, மதுரையில் எல்லிஸ் நகரில் வீடு கட்ட நில ஆர்ஜிதம் செய்யப்பட்டது. அது எந்தக் கட்டத்தில் இருக்கிறது? அங்குள்ள நிலச் சொந்தக்காரர்கள் நிலத்தை கொடுத்தும் பணம் கிடைக்கவில்லை நிலமும் அவர்களுக்கு திருப்பிக் கிடைக்கவில்லை, அதனால் அந்த நிலத்தை அவர்கள் பயன்படுத்த முடியாமல் இன்றைக்கு திரிசங்கு சொர்க்கத்தில் நின்று கொண்டிருக்கிறார்கள். அதுபற்றி அரசு என்ன முடிவு எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, இது ஒரு நல்ல கேள்வி. தனிக் கேள்வியாகப் போட்டால் விவரம் தரப்படும்.

தையல் தொழிலாளருக்கு குறைந்தபட்ச ஊதியம்

*வினா எண். 526— திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தையல் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயம் செய்ய அரசிடம் செயற்திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதுபற்றிய விவரம் என்ன?

(இ) எப்பொழுது இது அமுலுக்கு வரும்?